# பெருவேண்டுகோள்



உடம்பிலே ஆயிரம் கண்களையுடைய இந்திரனின் மகனான சயந்தன் கனவில் பல்லாயிரம் கண்கள் கொண்ட தோகையை உடைய மயில்மீது எழுந்தருளி "யாம் உன்னைச் சிறை மீட்போம், துயரப்படாதே" என்று கூறிய இறையவனே! ஒளிவீசும் செம்மேனி யுடையவனே! வேலிறைவனே! எனை மறவேல்! எனை மறவேல்!.

(1)

ஞானத்தால் மிக்க சைகீசவ்விய முனிவரின் சீடன், ஒருவன் அறநெறி நில்லாமையால் அவனைப் பற்றிய பொய், கொலை, கள், களவு, காமம் ஆகிய ஐம்பெருந் தீவினைகளின் வலியைக் களைந்த இறைவனே! ஞான வடிவனே! அருள் நிலையனே! மிக்க தூய்மையில் விளங்குபவனே! அறியாமை ஏதும் தீண்டாத குமாரப் பிரவுவே! எனை மறவேல்! எனை மறவேல்!

(2)

முருகா! வேல் முருகா! என்று கூறும் ஒரு பெண்மணியின் கணவன் அவள் கையைக் குருதி பெருக வெட்டியபோது, அந்தக் கை வளரும்படி அருள்செய்த தண்ணளியுடையவனே! மணமுடைய மாலை அணிந்த திருமார்பினனே! எனை மறவேல்! எனை மறவேல்!

(3)

தேனையுண்டு வண்டுகள் இசைபாடும் சோலைகள் உள்ள வேலூரை ஆண்டு வந்த திருமகள் தங்கிய புகழுடைய நல்லியக் கோடன் என்னும் அரசன் உறங்கும்போது அவன் கனவில் எழுந்தருளி வயலில் உள்ள மலர்களையே வேல்களாகக் கொண்டு ஏவுதி! பகைவர் அழிவர் என்று கூறிய வள்ளிப் பிராட்டியின் தலைவனே! எனை மறவேல்! எனை மறவேல்!

(4)

பிறையணிந்த சடையுடைய சிவபிரானும் அவன் தேவி மங்களேசுவரியும் எழுந்தருளியுள்ள திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்தில் நின்னை வழிபட்ட கார்த்திகைச் சுவாமிகள் இல்லம் அடைந்து அவர் நின் கையிலிட்ட தூய உணவையுண்டு அவருக்குக் கூறவேண்டுவன கூறி மறைந்தவனே! இருளாகிய மலத்தின் பகையாய் விளங்கும் மணியே! எனை மறவேல்! எனை மறவேல்!

(5)

எளியேன் பாடிய தமிழ்ப் பாடல்களை நின் திருமுன் ஓதிய காலை என்முன் தோன்றி “நீ விரும்பும் ஆன்மலாபத்தைத் தா என்னால் முடியாதோ” என்று அருளோடு வினவி மறைந்தவனே! இதுகாறும் நீ என்னை ஆட்கொள்ளுமுறை அறிகிலேன். காற்றுக் கடவுன் கடவுகின்ற ஒப்பற்ற தேரை உடையவனே! எனை மறவேல்! எனை மறவேல்!

(6)

மாடுகளும் ஆடுகளும் பெருகிவரும் மேலான வளமுறைய பிரப்பன்வலசை நன் காட்டில் நினது திருவடியைச் சிந்தித்திருந்த காலை எவ்வித ஊடலும் இன்றி எழுந்தருளி ஒருமொழி ஓதி மறைந்த மலர்ந்த முகமுடைய முனியே! எனை மறவேல்! எனை மறவேல்!

(7)

பெருமை குலைந்த வைணவர் ஞானம் நிரம்பிய சிவநெறியை எண்ணற்ற நிந்தைகள் செய்து எனக்கும் துயர் தருதலை வலிமையுடைய அதிகாரியால் ஒழியும் படி செய்தவனே! மேன்மையுடைய குண்டலம் அணிந்த முருகனே! எனை மறவேல்! எனை மறவேல்!

(8)

திருச்செந்தூரில் அன்பர் ஓஒதய பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம் அழிவற்ற எனது உள்ளம் விரும்பும் இனிமையுடையது என்று உன் அடியவனாகிய முத்தம்மையார் என்னும் மூதாட்டியின்பால் வந்து கூறியருளிய செந்தில் இறைவனே! ஒழுங்கும் பெருமையுமுடைய வேதங்களின் தலைவனே! எனை மறவேல்! எனை மறவேல்!

(9)

நினது திருவடிக்கண் முழு அன்போடு திருப்புகழை அருளிச் செய்த அருணகிரிநாத முனிவரை வருத்திய தொழுநோய் நீங்குமாறு செய்து ஒப்பற்ற பேரின்பத்தை தழங்கிய துரையே! கழுகுமலையில் எழுந்தருளியுள்ள வேலவனே! அருளே திருமேனியாகக் கொண்ட முருகனே! பிழைபடாத நன்னெறியின் முதல்வனே! எனை மறவேல்! எனை மறவேல்!

(10)

